செ.வெ.எண்: 60/2017 நாள்: 23.01.2017

**பத்திரிக்கை செய்தி**

அரசு புறம்போக்கு மற்றும் பட்டா நிலங்களில் உள்ள சீமை கருவேல் மரங்கள் சுற்றுபுற சூழலுக்கு தீங்கு விளைவிப்பதாகவும் அதனை அகற்றிடுமாரும் சென்னை உயர் நீதிமன்றம் மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு W.P.16485/15 மற்றும் 16645/15 -ல் 20-12-2016 மற்றும் 10-01-2017 -ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் பட்டா நிலங்களில் உள்ள சீமை கருவேல் மரங்களை 30-01-2017 க்குள் அகற்ற உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி சீமை கருவேல் மரங்கள் அகற்றப்பட்ட இடங்களை பார்வையிட்டு அறிக்கை செய்யுமாறும் மாவட்ட முதன்மை நீதிபதிக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் உத்தரவிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக மாவட்ட நீதிபதி மற்றும் முதன்மை குற்றவியல் நீதிபதி, ஆகியோர் அடங்கிய குழுவினர் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களையும் ஆய்வு செய்து சீமை கருவேலம் மரங்கள் உள்ள இடங்களை அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் மறறும் கூடுதல் தலைமையிடத்து துணை வட்டாட்சியர். வருவாய் ஆய்வாளர் தலைமை நில அளவர், மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்களுடன் செயற் பொறியாளர்கள் நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார அமைப்பு, மற்றும் நாகர்கோவில் நகராட்சி ஆணையருடன் சென்று தணிக்கை மேற்கொண்டு தத்தமது புறம்போக்கு நிலங்களில் உள்ள சீமைகருவேல் மரங்களை வேருடன் முற்றிலுமாக அகற்றி 30-01-2017 -க்குள் அறிக்கை சமர்ப்பிக்க அறிவுறுத்தினர்.

மேலும் அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட்ப்பட்ட அனைத்து பட்டாதாரர்களும் தங்களது நிலத்தில் சீமை கருவேல் மரங்கள் நின்றால் அதனை வேருடன் உடனடி அகற்றிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தவறினால் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் உதவியுடன் சீமைகருவேல் மரங்கள் அகற்றப்பட்டு அதற்குரிய தொகை சம்மந்தப்பட்ட பட்டாதாரர் மூலம் வசூலிக்கப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. மேலும் நீர் வளத்தினை முழுமையாக பாதிக்கக்கூடியதும் காற்று மற்றும் நில மாசுகளை உருவாக்கக்கூடியதுமான சீமை கருவேல் மரங்களை முழுமையாக அப்புறப்படுத்த அனைத்து தரப்பினரும் இணைந்து செயலாற்ற இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் பணிவுள்ள

ஒம்/-கா.அருளரசு,
வட்டாட்சியர்,
அகஸ்தீஸ்வரம்.

/உண்மை நகல் / உத்தரவுபடி/

வட்டாட்சியருக்காக

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.